நகல்

11.5.17 ரா. இராகவன்

நகல் – 1

Replied on
17.5.17

இராமநாதபுரம்.
11-5-17

என் அன்புள்ள

ஸ்ரீமான் கல்யாண சுந்தரம் ஐயரவர்கட்கு
விஞ்ஞாபனம்.

தங்களருமைத் தாயாரவர்கள் தேக
வியோகத்தைத் தங்கள் கடிதவாயிலாகத் தெரிந்து
அதிகமாக மனம் வருத்தமுறுகின்றேன். அவர்க
ளுடைய உத்தம வாயல்புகள் என்னெஞ்சிலே யுள்ளன.
நம்முடைய ஐயரவர்கட்கு வயோதிக காலத்தில்
இப்பெரிய துக்க நேர்ந்ததே என்று எண்ணுந்
தோறும் மனம் புழுங்குகின்றேன். தங்கட்குந்
தங்களருமைக் குழந்தைகட்கும் பெரிய ஆத
ரவாக இருந்தார்களென்பதை நானே தெரிவேன்.
தங்கள் அறிவாற்றலிப் பெரிய துக்கத்தை ஆற்றிக்
கொள்ள வேண்டுவதேயன்றி வேறென்ன சமாதா
னம் செய்யலாகும்?

நிற்க. இங்கே மஹாராஜ ரவர்களிரண்டா
மிராணியான் மூத்த குமாரர் நேற்று ஜ்வர நோயாற்
றேக வியோகமடைந்தது எல்லாருக்கும் அளவ
றந்த துக்கத்தை விளைத்துள்ளது. இவ்வளவழகா
ன குமாரரை இனிக் காண்பதரிது. மஹாராஜாவைர்கள்
அடையுந் துக்கத்துக்கு அளவேயில்லை.

இங்ஙனம்
தங்களன்புள்ள
ரா. இராகவன்.

நகல்

11.5.17 ரா. இராகவன்

நகல் -1

XXIX

18

ஸ்ரீ

இராமநாதபுரம்

ரா. இராகவையங்கார்

11-5-17

Page - 663 & 665.

192

F 282-284